**அசல் வழக்கு எண்.14/2020**

**தேதி-19.09.2023**

**வா.சா.1 திரு. புருஷோத்தமன், த/பெ. மனோகரன்**

**சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு 3வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த வழக்கு எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தை பதிவு செய்து தர வேண்டி தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை யார் மீது போடப்பட்டுள்ளது என்றால் அருள்குமார் என்பவர் மீது போடப்பட்டுள்ளது. அருள் குமார் என்பவருக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அருள் குமார் அவருடைய மச்சானான திரு. பொன்னுரங்கத்தின் பவர் ஏஜெண்ட் திரு. நடராஜன் மூலம் கிரையம் பெற்றார். நான் அருள் குமாருடன் கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்.

பொன்னுரங்கத்திற்கு சொத்து எப்படி பத்தியப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொன்னுரங்கத்திற்கு தாவா சொத்து பாக பிரிவினை மூலம் கிடைக்கப் பெற்றது என்றல் இருக்கலாம். பொன்னுரங்கத்திற்கு உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காரணம், மூன்று வாரிசு சான்றுகள் கொடுக்கப்பட்டது, அதில் ஒரு வாரிசு சான்றிதழில் பெண் வாரிசுகள் இல்லை, ஒரு வாரிசு சான்றிதழில் ஒரு பெண் வாரிசு உள்ளார், மற்றொரு வாரிசு

சான்றிதழில்இரண்டு பெண் வாரிசுகள் உள்ளார்கள்.

நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர் ( திருமதி. மோகனா, 3-வது பிரதிவாதி ) யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொன்னுரங்கத்தின் தந்தை எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பொன்னுரங்கத்திற்கு பாக பிரிவினை எந்த வருடம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டு அவர் எவ்வித ஆவணமும் எழுதாமல் இறந்துவிட்டதால் அவருடைய 6 வாரிசுகளுக்கு 3வது பிரதிவாதி உட்பட சொந்தமான சொத்தில் நான் கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டேன் என்றால் முதலில் சாட்சி உண்மைதான் என்று சாட்சியம் அளித்துவிட்டு பின்பு விளக்கம் கேட்டு தெரிந்து நான் அருள் குமாரிடம் தான் கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டேன், அதை பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார்.

மோகனா என்பவர் செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த வழக்கில் எனக்கு சம்மன் கிடைக்கப் பெற்று நான் மட்டும் தான் ஆஜராகி வழக்கை நடத்தி வருகிறேன். மற்றவர்கள் அனைவரும் ஒருதலைபட்சமாகவிட்டார்கள், வழக்கை போட்ட மோகனாவே நீதிமன்றத்திற்கு வந்தது கிடையாது. மோகனா என்பவர் எவ்வளவு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் ஒப்பந்தம் போட்ட சொத்திற்கு மட்டும் தான் பாகம் கேட்டுள்ளார்கள்.

அந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் நான் ஒப்பந்தம் போட்ட சொத்தில் மட்டும் 6-ல் 1 பங்கு பாகம் கேட்டுள்ளார். 30.10.2000 தேதியிட்ட பாக பத்திரத்தை ரத்து செய்யவும் பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பொன்னுரங்கம் நடராஜனுக்கு எழுதிக் கொடுத்த பவர் பத்திரத்தையும் ரத்து செய்ய கோரி அந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

அந்த வழக்கின் சங்கதிகளை தெரிந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் நான் கிரைய ஒப்பந்தம் போட்டதின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional District Judge,
Fast Track Court, Arani.